28th August 1970[

Pictures of Gods and religious saints

*33. *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that pictures of Gods and religious saints from Government Offices and Institutions have been removed by the orders of the Government ;

(*b*) if so, the number of such pictures so far removed ; and

(*c*) how they have been disposed of ?

கடவுள் படங்கள், மதத் தலைவர் படங்கள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு அலுவலகங்களிலிருந்தும், அரசு நிறுவனங்களிலிருந் தும் கடவுள் படங்கள், மதத் தலைவர் படங்கள் ஆகியவை அரசு ஆணைகளினால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதுவரை அகற்றப்பட்ட அத்தகைய படங்கள் எத்தனை ?

(உ) அவை என்ன செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேலவை முன்னர் விவர (*) அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எத்திராஜுலு : கடவுள் படங்கள், மதத் தலைவர்கள் படங்கள் அரசு அலுவலகங்களில் இருந்ததனால், ஏதேனும் சச்சரவுகள் ஏற்பட்டு, அதனால் தொல்லைகள் விளைந்து அது அரசாங்கத்தின் கவனத் திற்கு முறையீடாக வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால், அந்த விவரத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1966-ம் ஆண்டிலேயே அப்படிப் பட்ட ஒரு முறையீடு பழைய அரசிற்கு வந்ததாகத் தகவல் இருக்கின் றது. இந்த அரசு மதச் சார்பற்ற அரசு என்ற முறையில் நடைபெறு கிறபொழுது, பல மதங்களைச் சேர்ந்த கடவுள் படங்களை வைப்பதில் சச்சரவுகள் நடைபெறக்கூடும் என்றுதான் அரசு அலுவலகங்களில் அந்தப் படங்கள் தேவையில்லை என்று அரசு கருதியது.

திரு. எம். எத்திராஜுலு : காங்கிரஸ் அரசு காலத்தில் இம்மாதிரி முறையீடு வந்ததாக எனக்குத் தெரிந்த வரையிலும் இல்லை. அமைச்சர் களிடத்தில் அவ்வமயம் விசாரித்ததில், எந்தப் புகாரும் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகுதான் அவர்களே வேண்டுமென்று கடவுள் படங்களை அகற்ற வேண்டுமென்று நடவடிக்கை எடுத்திருக்கிறார்களே தவிர, காங்கிரஸ் அரசு மீது இந்தப் பழியைப் போடுவது சரியில்லை என்பதை முத லமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(*) Printed as Appendix I

[28th August 1970

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுபற்றி எதிர்க் கட்சித் தலைவருக்குக்கூட தெரியும் என்று நினைக்கிறேன். 21-3-66-ல் அப்படிப்பட்ட மனு ஏற்கெனவே இருந்த அரசாங்கத்திடம் தரப்பட்டிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர்: இந்தப் படங்களில் சில "given to staff members" என்று போடப்பட்டிருக்கிறது. அதாவது ஸ்டாஃப் மெம்பர்களுக்குக் கொடுத்து விட்டதாகக் குறிப்பு காணப்படுகிறது. இந்தப் படங்கள் எல்லாம் அரசாங்க ஆபீசில் எப்போது மாட்டப் படுகிறதோ அப்போதே அவை அரசாங்கச் சொத்துக்களாக ஆகின்றன. அதனால் எல்லாவற்றையுமே சேஃப் கஸ்டடியில் வைத்துக்கொள்ளும்படி சுற்றறிக்கைவிட அரசு கருதுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சில படங்களை வேலைபார்க்கிற அரசு அலுவலாளர்கள் தாங்களே கொண்டுவந்து தங்கள் திருப்திக்காக மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட படங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டால் அதற்கு வழக்குப் போடுவார்கள். அரசாங்கம் 'படப்பறி' இயக்கம் நடத்தி அவற்றை எடுத்துக்கொண்டது என்று கூறப்படும். ஆகையால் அந்தப் படங்கள் யார் யாருக்குச் சேர வேண்டுமோ, அவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டு, யாரும் சொந்தம் கொண்டாடவில்லை என்றால், அலுவலகத்தில் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, அரசு காரியாலயங்களில் பல ஆண்டுகளாகத் தெய்வப் படங்களை அவர்கள் சொந்த இஷ்டம்போல வைத்திருக்கிறார்கள். திடீரென்று அந்தப் படங்களை எடுத்துவிடும் படியாக உத்தரவு போட்டதுமில்லாமல், அந்த இடங்களில் அமைச்சர்களின் படங்களை வைக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுதான் பல பேருடைய மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. ஆகையால் அப்படிப்பட்ட உத்தரவு போடப்பட்டிருக்கிறதா? மறைந்த முதலமைச்சர் அவர்கள் படமும் இந்நாள் முதலமைச்சர் படமும் அந்த இடத்தில் வைக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பல பேருடைய மனத்தை அந்தப் படங்கள் புண்படுத்துவதாகச் சொன்னார்கள். பல பேருடைய மனத்தை அல்ல, அது சில பேராக இருக்கலாம். முன்னாள் முதலமைச்சர், இந்நாள் முதலமைச்சர் படங்களை அரசு அலுவலகங்களில் வைக்க வேண்டுமென்று உத்தரவு போடப்படவில்லை. சில இடங்களில் அப்படங்களை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட நேரத்தில், அரசாங்கச் சார்பில் வைக்கக் கூடாது என்றும், அந்தந்த அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள் தங்கள் சொந்தச் செலவில் வைத்துக்கொள்ளலாம் என்ற அளவில்தான் முதலமைச்சர்கள் படங்களை வைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் புதியது அல்ல. 1965-ல் பிரதம மந்திரி படத்தையும், முன்னாள் முதலமைச்சர் படங்களையும் கல்வி நிலையங்கள் போன்றவைகளில் வைக்கலாம் என்ற உத்தரவு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது.

28th August 1970]

திரு. எஸ். ராகவானந்தம் : 1955-ல் விழுப்புரம் ஸ்டேஷன் மாஸ்டராக நான் இருந்தபோது ரயில்வே ஸ்டேஷனில் சுவாமி படங்கள் இருந்ததை எடுத்து மூட்டை கட்டி அனுப்பிவிட்டேன். அதைப்பற்றி ரிப்போர்ட் செய்தபோது, அது 'இன்டிவிஜுவல்' அபிப்பிராயம் என்றும் அரசாங்கம் தலையிடாது என்றும் காங்கிரஸ் அரசாங்கம் சொல்லிவிட்டது. அதே மாதிரி இந்த அரசாங்கமும் அங்குள்ள சுவாமி படங்களை எடுத்துவிடுவதில் தலையிடாமல் இருக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதைப்போன்ற கருத்துக்கள் பல வந்ததால்தான், அந்தக் கடவுள் படங்களை வைத்துக்கொண்டு உங்கள் சண்டையில் கடவுளை இழுக்க வேண்டாமென்ற அளவில் அலுவலகங்களில் அமைதியான சூழ்நிலை உருவாக்க இந்த அரசு விரும்புகிறது. அலுவலகங்களில் அப்படங்களை வைக்க வேண்டாமென்று சொல்கிற காரணத்தாலேயே, அந்தப் படங்களிலுள்ள கடவுள்கள் உருவத்தில், கடவுள் தன்மையில் யார் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அந்த நம்பிக்கையை பாதிக்க அல்லது புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசிற்குத் துளியேனும் கிடையாது. இதை இந்த அரசு பல செயல்களில் நிரூபித்திருக்கிறது. கடவுள் படங்களை எடுக்கச் சொல்லிவிட்டார்கள், ஆகையால் நாஸ்திகர்கள் என்று ஒரு பக்கத்திலும், கும்பகோணத்தில் மகாமகம் விழா நடந்தபோது அதற்கான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்ததாலும், வைத்தீஸ்வரன் கோவில் கும்பாபிஷேகம் நடந்ததாலும், திருவாரூரில் கருணாநிதி தேர் ஓட்டினானே என்றும் ஆகையால் இவர்கள் சுயமரியாதைக்காரர்களா என்றும் ஒரு பக்கம் பிரசாரம் நடைபெறுகிறது. ஆகையால் எந்த மதவாதியினுடைய மனதையும் புண்படுத்துகிற நோக்கமும் இந்த அரசிற்கு இல்லை. மதச்சண்டையை, அவரவர்களுக்குள் உள்ள கடவுள் கொள்கைச் சண்டையை அரசாங்க அலுவலகங்களில் வைத்துக்கொள்ளவேண்டாம் என்பதால் அலுவலகங்களில் படம் வேண்டாமென்று சொன்னோமே, தவிர, யார் மனதையும் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்குக் கிடையாது.

THIRU A.R. DAMODARAN : In view of the frequent controversies that arise about the portraits that are displayed in Government offices, may I know, Sir, whether the Government will issue an order that only scenery photos should be displayed in Government offices and that portraits of political personalities or saints or Gods need not be displayed in a secular State, and whether this suggestion would be approved by the Government because future Governments may decide to install other portraits and the public may get confused ? I would like to know whether the display of all photographs would be banned by the Government and only scenery photos be displayed.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதலமைச்சர் என்பவர்கள் அரசாங்கத் தலைமை நிர்வாகிகள் என்ற அளவில் இருப்பவர்களே அல்லாமல், அவர்களை அரசியல் தலைவர்களாகக் கருதக்கூடாது, அரசு அலுவலர்களைப் பொறுத்தவரையில். ஏனென்றால் முதலமைச்சர்கள் யாராக இருந்தாலும், இந்த அரசாங்கத்தினுடைய தலைவர்கள் என்ற முறையில்தான் மதிக்கப்படுகிறார்களே தவிர, அரசியல் தலைவர்கள்

[28th August 1970

என்ற முறையில் அலுவலகங்களில் மதிக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் எண்ணத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அரசாங்க அலுவலகங்களிலுள்ள ஜனாதிபதி படம், பிரதமர் படம் ஆகியவற்றோடுகூட, பயணிகள் விடுதிகள் போன்றவற்றில் உள்ள முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் படங்கள் உட்பட, எல்லாவற்றையும் எடுக்கவேண்டியிருக்கும். அதனால் உறுப்பினருடைய கருத்து உடனடியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அரசாங்க அலுவலகங்களில் சர்ச் அல்லது ஏசு கிறிஸ்து படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றனவா ? எத்தனை அலுவலகங்களில் அப்படியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதில் நம்முடைய ஜானிடாய்க்கு அதிக அக்கறை இருக்குமானால், அந்தப் பட்டியலைத் தந்தால் அரசு கவனிக்கும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : 1966-ல் வந்த புகாரில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் புகாரில், 'அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள், பள்ளிகள் ஆகியவற்றிலும் அரசிற்குச் சொந்தமான பேருந்துகளிலும் கூட, பல்வேறு கடவுள் படங்களை வகைதொகை அற்ற முறையில் நிறுவிவரும் வழக்கம் இருப்பதால், அந்தப் படங்கள் அந்தக் கடவுளை வழிபடாதவர்களுடைய மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. அதனால் பலருக்கு மன வருத்தமும் கவலையும் எதிர்ப்புணர்ச்சியும் ஏற்படுகின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Earth Tremors

*35. *Q.* THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the attention of the Government was drawn to the earth tremors which occurred during March, 1970 in Thiruppathur, Acchukattu area in Ramanathapuram district ; and

(*b*) if so, whether the Government will sanction any aid to those who have lost their houses as a result of that ?

பூமி வெடிப்பு

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் அச்சுக்கட்டுப் பகுதியில் 1970 மார்ச் மாதத்தில் பூமி வெடித்தது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் வீடு இழந்தவர்களுக்கு அரசு ஏதேனும் உதவியளிக்குமா ?